உ
சிவமயம்

# இந்து சாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு.
வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

# HINDU ORGAN

செய்தித் தாளாகப் பதிவுபெற்றது]
பிரதி விலை : சதம் 20.

ஆரம்பம் விரோதி ஞு (1889) ஆவணிமீ 28-ம் உ அச்சகம் சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் கொலைபேசி: 356

புத்-கூ ] யாழ்ப்பாணம் காலயுத்தி ஞு கார்த்திகை மீ க உ வெள்ளிக்கிழமை (17 11-1978) [ இல-உக

# மதுவிலக்கு விதி சட்டப்படி வகுக்கப்பட வேண்டும்

## 88-ஆவது ஆண்டுக் கூட்டத்தில் சைவபரிபாலன சபைத் தீர்மானம் 12-11-1978

இச் சபையின் ஆயுட்கால அங்கத்தவரும் பரோபகாரியுமாரும் கொழும்பு சட்டத்தரணி திரு. சு. சிவசுப்பிரமணியம் அவர்கள் எழுத்து மூலம் சமர்ப்பித்த பல அரிய கருத்துக்களில் ஒன்ருகியது மது அரக்கனின் கொடுமைபற்றியது, இந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு அரசினர் மது விலக்குச் சட்டமியற்றிப் போதைப் பொருள்களைப் பாவித்து இந்நாட்டு மக்கள் தீயபாதையிற் சென்று வாழ்க்கையைப் பாழாக்காது நல்ல வண்ணம் வாழ உதவ வேண்டும் என்று யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை அரசினரைக் கேட்டுக்கொள்ளுகின்றது" என்ற பிரேரணையை நிறைவேற்றியது.

சபைத் தலைவர் திரு. ச. செல்வராசா தமது தலைமையுரையில் இச் சபை எம் முன்னோராகிய பெரியோர்களால் நாவலர் பெருமானின் போதனைக் கமைய நிறுவப்பட்டதென்றும் அதனையும் அதன் உத்தம இலட்சியத்தையும் சபை என்றென்றும் காத்து வந்ததுபோல் இன்றும் இனியும் காப்பதற்குரிய வழியிலே செயற்படும் என்பது வெற்றுரை அல்ல உண்மை என்றும் கூறினர்.

சென்ற வருடாந்தக் கூட்ட அறிக்கை, செயலாளர் அறிக்கை, கணக்கு அறிக்கை என்பன ஏற்றுக் கொள்ளப்பட்டபின் நிருவாக சபையில் (ஆ) பிரிவில் உள்ள 8 அங்கத்தவர்கள் சபை விதிகளின்படி விலக அவர்கள் இடத்திற்குத் தெரிவு நிகழ்ந்தது.

தெரிவு செய்யப்பட்டோர் :

திரு. வ. கந்தசாமி, திரு. நம. சிவப்பிரகாசம், திரு. சி, சிவகுருநாதன் (திரும்பவும் தெரிவு) திரு. சே. க, சண்முகம்பிள்ளை (புதுத் தெரிவு) திரு. இ. தங்கராசா, திரு. இ. பொ. இராசையா. திரு. சி. இராசேந்திரம் (திரும்பவும் தெரிவு) திரு. இ. சம்பந்தநாதன். (புதுத் தெரிவு)

அதன் பின் உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்றது.

விபரம் :

தலைவர் : திரு. ச. செல்வராசா (ஏகமனதாக)
உபதலைவர்கள்: 1. திரு. நம. சிவப்பிரகாசம் ,,
2. திரு. சி. இராசேந்திரம் ,,
கௌரவ செயலாளர் : திரு. த. சண்முகலிங்கம்
கௌரவ உதவிச் செயலாளர்கள் :
1. திரு. ம. அமிர்தலிங்கம் (ஏகமனதாக)
2. திரு. இராஜ இராஜேஸ்வரன் தங்கராசா (ஏகமனதாக)
பொருளாளர் :
திரு. வை. செ. செந்தில்நாதன் (ஏகமனதாக)
பரீட்சைக் காரியதரிசி:
திரு. வை. இரகுநாதமுதலியார் ,,
சமயப் பிரசார அமைச்சர் :
திரு. மு. மயில்வாகனம் (ஏகமனதாக)

---

## நாட்டுக்குரியது நாவலர் திருநாள்



வருகிற வியாழக்கிழமைப் பெருநாள் எங்கள் ஐந்தாம் குரவர் குருபூசைத் தினமல்லவா! சைவ சங்கங்கள் சபைகள் மட்டுமல்லக் கலாசாலைகள் பல்கலைக் கழகம் முதலிய நிலையங்களில் இந்தப் பெருநாள் உரிய முறையில் விழாவாக அமையும் என்று எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை

## தீபத் திங்கள் இன்று உதயம்

திருக் கார்த்திகைச் சிறப்புப் பொருந்திய கார்த்திகை மாதம் இன்று தொடங்குகின்றது. வியாழக்கிழமைச் சங்கிராந்தி 20 நாடி 40 விநாடி (மாலை 5 - 58 மணி) விருச்சிக இராசியிலே திரிவிக்கிரம மூர்த்தியாகச் சூரிய பகவான் பிரவேசிக்கும் காலம் இது.

சோமவார விரதமும் விளக்கீட்டு வைபவமும் தொடங்கும் மாதமாகிய கார்த்திகை கூதிர் காலம். சிவன் கோயில்களிலே திருவிழாக்கள் பொலியும் திங்கள், திருக்கேதீச்சரத்திலே இந்நாட்டு மக்கள் எல்லோரும் நான்கு திங்கள்களிலும் விழாஎடுக்கும் சிறப்பு குறிப்பிடத்தக்கது

கார்த்திகைப்பூரணையின் பின் கணபதி விரதம் ஆரம்பமாகும் நியமமும் உண்டு

நாவலர் குருபூசையும் கார்த்திகையிலேயே!

---

உ
சிவமயம்

## ஆறுமுகநாவலர் குருபூசை

நிகழும் கார்த்திகை மாதம் 7-ம் திகதி (23—11—78) வியாழக்கிழமை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை சைவ பரிபாலன சபை ஆதரவில், சபை ஆச்சிரம மண்டபத்தில் நிகழும்.

முற்பகல் 9 மணியளவில் சிவபூஜா மண்டபத்தில் சிவபூஜையும், நாவலர் சற்குருமணிமாலை ஓதலும் மாகேஸ்வர பூஜையும் நடைபெறும்.

**மாலை நிகழ்ச்சிகள் 5-00 மணிக்கு ஆரம்பம் :**

தலைவர்: ச. செல்வராஜா
(சைவ பரிபாலன சபைத் தலைவர்)

1. நாவலர் எழுதிய முதலாம் சைவ வினவிடை, முதலாம் பாலபாடம் ஆகியவற்றை வெளியிடுபவர் :
திரு. நம. சிவப்பிரகாசம் அவர்கள்
(இந்துசாதனப் பத்திராதிபர்)
முதல்பிரதி பெறுபவர் :
தி. ச. சண்முகக்குமரேசன் B. Sc. அவர்கள்
2. சிவகாசி அருணசலக் கவிராயர் பத்தியரூபமாக இயற்றிய யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சரித்திரம் படித்துப் பயன் சொல்லப்படும்.
மேற்படி நூலைப்பற்றி ஆய்வுரை கூறுதல் :
சித்தாந்த வித்தகர், சே. க. சண்முகப்பிள்ளை அவர்கள்
புராணபடனத்தில் பங்குபற்றுபவர்கள்:
சைவப் பெரியார், தம்பிஐயா
பண்டிதர், செ. சிவப்பிரகாசம்
சைவப் பெரியார், மு. சதாசிவம்
ஆசிரியர், வ. முருகேசு
இசை வல்லார், வே. தம்பிஐயா முதலியோர்!
3. விரிவுரை :
"நாவலரும் சிவபாதசுந்தரனரும்"
திரு. ந. சபாரத்தினம் B.A. அவர்கள்
(யா. இ. க. இளைப்பாறிய பிரதம ஆசிரியர்)
4. நன்றிகூறல்.

சைவ அபிமானிகள் யாவரும் தவருது சமுகம் அளிப்பார்களாக.

மு. மயில்வாகனம் — சமயப் பிரசார அமைச்சர்.
த. சண்முகலிங்கம் — கௌரவ காரியதரிசி
சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம். 15-11-78

---

## நாவலர் பிறந்திலரேல்!

நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேற்
சொல்லுதமி ழெங்கே சுருதியெங்கே — எல்லவரும்
ஏத்துபுரா ணுகமங்க ளெங்கேப்ர சங்கமெங்கே
ஆத்தனறி வெங்கே அறை;

சி. வை. தாமோதரம்பிள்ளை

---

## நாவலர் சொன்ஞர் இந் நயம்

"இறை — ஒளி"

சேவை செயவெனின் செந்தமிழ் அன்பர்காள்!
யாவை யினும்மெய் யறிவொன்றே — தேவையென
நாவமையச் சைவநெறி நன்கறிந்து தொண்டியற்றீர்.
நாவலர்சொன் ஞரிந் நயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ
ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு
மோங்குக
ஆழ்க தியதெல் லாமர னாமமே
சூழ்கவை யகமுந்துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

காலயுத்திஹு கார்த்திகை 1-உ
(17-11-78) வெள்ளிக்கிழமை

## பனைத்துணைப் பயனைப் பெறத் தினைத்துணைச் சிரமம் செய்வோம்!

அணுசக்தி அழிவுக்கும் ஆக்கத்துக்கும் அமைக்கப்படக்கூடியதோர் ஆயுதம் ஆனல் ஆணவ மூனைப்புடைய அரசுகளெல்லாம் அழித்தற் கருவியாக அதனைப் பயன்படுத்தி வருகின்றன. அந்த அடாத செயலால் உயிரிழந்தவர்களும் ஊறுனடந்தவர்களும் உலகிற் பல கோடி மக்கள்.

இந்த அணுசக்தி போன்றது கற்பக தருவெனச் சொற் சுவையுடன் குறிக்கப்படும். பனைதரும்பானம் அறிவை அழிக்கும்; அதிபாதகத்தைச் செய்விக்கும் கள் பனையினின்றுப் பெறப்படுவது.

அந்தப் பனை இரசம் சுண்ணும்புடன் பழக்கப்பட்டாற் சாதகமான பானமாகின்றது. தித்திப்புக்குரியது. அவ்வகை உணவை உண்டுபண்ணுதற்குதவுவது; இது ஆக்கந் தரும் பயன்.

பழையகாலத்தில் மக்கள் நூலறிவு மட்டுமன்றிச் சாலும் பொது அறிவு கொண்டு பனை வளத்தை உரியவாறு பயன்படுத்தி வந்தனர். நோயின்றி வாழ்ந்தனர். ஆயபொருள் வளத்தையும் பெற்றனர். கள் கொடிது என்று பிள்ளைகளுக்குக் கற்பித்து வந்தனர். புகுந்தது புற நாட்டாட்சி. பழையன கழிந்தன, புதியன புகுந்தன, பனங்கட்டியைப் பேணும் பாணையும் மறைந்துவிட்டது. இந்த இடத்தில் சீனியென்ற பொருள் உபயோகத்துக்கு வந்தது; கிரயம் குறைந்த வகையில் யாவரும் அதனைப் பயன்படுத்தினர். கால விபரீதம் காரணமாக இதன் விலை ஏறியதுமட்டுமன்றி இப்பொருள் எப்பொழுதும கிடைக்க முடியாத நிலையும் ஏற்பட்டது.

இந்த இடரின் காரணமாகப் பழையபடி பனைமை நிமிர்ந்து பார்க்க நினைத்தனர் மக்கள். அரசும் அநுதாபம் காட்டியது. ஆனல் தடுத்தது கள் அபிமானம்! பதநீர் உண்டு பண்ணுவதிலும மயக்கம் தரும் கள் இறக்குவதே அத்தொழிலாளிக்கு உகந்த உழைப்பு என்று கருதப்பட்டது. கருப்ப நீர் காய்ச்சும் சாலைகள் எழுந்தவாறே வீழுந்தன.

இப்பொழுது பனம் பொருள் ஆராய்ச்சிக்குப் புத்தூணர்ச்சி புகுத்துவான் அரசு ஆவன செய்ய முன வந்திருக்கின்றது. இது வரவேற்கப்படவேண்டியது.

பனையை வளர்க்கலாம்; வளர்கும் வகையை விளக்க வைக்கலாம் பயன் பெறும் விதத்தைப்பற்றிக் கற்பிக்கலாம்; இவை எல்லாம் நல்லனவே, ஆனல் முதற்கண் வேண்டப்படுவது மிக முக்கியமான தேசத்தொண்டு, மதுவிலக்கை நாடு சட்டப்படி நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

பனைவளம் கனிபொருந்திய வடபாலிற் பூரண மதுவிலக்குச் சட்டம் இயற்றப்பட்டுச் செயற்படுத்தப்படுமேயானுற் கருப்பநீர் கடல்போலப் பெருகும். பனங்கட்டி உண்டுபண்ணும் பணி பெரும் பொருளாதாரப் படியாக விரியும். பனை நீர் இறக்குவோர் தொழிலுக்கு இடையூறு இருக்க முடியாது.

ஒருகல்லால் இருபயன் பெறுவதுபோல மதுவிலக்கு நடைபெற்றால் பனம்பொருள் விருத்தி தானுகவே வளம் பெறும்.

———

# அருள் மொழி அரசின் இதயத்தில் 'இந்துசாதனம்'

அண்மையில் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் கொக்குவில் மஞ்சவனப்பதி திருமுருகன் ஆலயத்திற் கந்தபுராணத் தொடர் விரிவுரையாற்ற வந்தகாலை எமது பத்திரிகையின் சார்பில் முதுபெரும் புலவர் திரு. த. குமாரசுவாமிப் புலவர் அவர்கள் தலைமையில் சபையின் சமயப் பிரசார அமைச்சர் திரு மூ. மயில்வாகனம், திரு. கா இரகுநாதன், சைவப் புலவர் திரு. மு. திருஞானசம்பந்தன் ஆகியோரைக் கொண்ட குழுவினர் பெரியாரைச் சந்தித்தனர்.

அவ்வமயம் வாரியார் அவர்களின் பூசை வேளையும் வந்தமைந்தமையின் அனைவரதும் சேமம் குறித்துப் பிரார்த்தனை செய்த பின் எல்லோர்க்கும் பிரசாதம் வழங்கி, எமது குழுவினருடன் உரையாடத் தொடங்கினர். அன்னரது உரையாடலின்போதும், பிரார்த்தனையின்போதும் பெரியோர் தமது நலங் கருதலின்றி உலக சேமங் கருதியே கருமமாற்றுகின்றனரென்ற உண்மையைப் பூரணமாகக்காணமுடிந்தது.

ஆங்கு சமுகமளித்திருந்த அன்பர்களுக்கு அருள்மொழியரசு வழங்கிய அறிவுரைகள் என்றும் இதயத்தில் நிலைத்து வழி காட்டுவனவாயமைந்தன

உரையாடல் இந்துசாதனம்பற்றித் திரும்பிய போது இந்துசாதனம் பத்திரிகை சைவசமயத்துக்குப் பல்லாண்டுகளாக மரபுவழி நின்று சைவங் காக்கும் பணியைப் பாராட்டி பின்வரும் வாழ்த்தினையும் வழங்கி ஆசீர்வதித்தனர்.

வாழி இலங்கை வளர் இந்து சாதனம்
வாழிசிவ நெறியின் மாண்புமிகு — வாழியவே
அன்பரெலாங் கூற அருள்நெறியைக் காப்பாற்றி
இன்பமுடன் வாழ்க இனிது.

உரையாடல் சைவ உலகத்தின் நன்மை தீமைகளைப்பற்றித் திரும்பியபோது, இன்று சில ஆலயங்களில் வளர்ந்து வரும் பாதகச் செயல் ஒன்றைக் கேட்டு மிகவும் மனம வருந்திப் பின்வரும் கருத்தை விடுத்தனர்.

"கடவுள் பெயரால் பலியிடுதல் பெரும்பிழை - இறைவன் எல்லா உயிர்களுக்கும் தாயும் தந்தையுமாக இருக்கின்றான். ஆகையினால் ஆண்டவனின் குழந்தைகளாகிய ஆடு, கோழி முதலிய உயிரினங்களைக் கடவுளுக்கு மூன்பாகப் பலியிடுதல் மிகப் பெரும்பிழை. அவ்வாறு செய்பவர்கள் மீளாநரகத்திற்கு ஆளாவர்கள் எனக் கூறினர்

அச்சமயம் 'இங்குள்ள சில கோயில்களுக்கு வழிபடுவோர் பசுஇனங்களைத் தானமாக வழங்க, அக்கோயில் அதிகாரிகள் அவற்றை .... இறைச்சிக் கடைக்காரருக்குவிற்பனை செய்துவிடுகின்றார்களே!" என்று வாரியாரிடம் கூறியதும, மிக வேதனையுடன் இப்படியும் நடக்கிறதா? எனக் கேட்டு இவ்வழக்கம் மாபாதகமே என்றார்.

மேலும் வாரியார் கருத்து வெளியிடுகையில் :—

'கிறீஸ்தவர்கள், முகம்மதியர்கள் முதலியபிறமதத்தவர்களும் தெய்வத்தின் பெயரால் பலியிடுதல்கிடையாது" "உயிரினங்களைப் பலியிடுவது காட்டுமிராண்டித்தனத்தின் கையிருப்பு" என்று மகாத்மா காந்தி கூறியுள்ளார். ஆகவே இந்துசமயத்தவர்கள் தெய்வத்தின் பெயரால் பலி இடுவதையும் மிருகங்களைக் கடவுளுக்கு நேர்ந்து விடுவதையும் நிறுத்த வேண்டுமென வேண்டுகின்றேன்",

இலங்கைக்கு முதன் முதல் 1937-ம் ஆண்டில் வருகைதந்த வாரியார் தனது தனித்துவமான பிரசங்க ஆற்றலையும், தமிழறிவையும் தந்தையார் ஸ்ரீ மல்லையதாசரிடமே பெற்றவர், இவரது தீட்சாகுருவாக வாய்த்தவர் பழனி ஈசானசிவாசாரியார் அவர் [illegible] இய திருப்புகழ்ப்பாடல்களை மதுரை திருப்புகழ்ச்சாமிஜயர் அவர்களிடமே கற்றுணர்ந்தார்

அருள்மொழி அரசுக்கு இல்லறத்தின் நல்லமைச்சாய் வாய்த்தவர் அமிர்த வசனி அம்மையாரவர்கள், இருவரும் போற்றும் குழந்தைச்செல்வம். குன்றுதோறுடும் குமரனேயாவன் சீராட்டும், பாராட்டும் அவனுக்கே செல்கின்றன

இன்னும் பல்லாண்டு வாழ்ந்து பணி பெருக்கத் திருமுருக கிருபானந்த வாரியாருக்கு வளங்குறையாத வாழ்வினை இறைவன் வழங்கிடப் பிரார்த்திப்போமாக.

முந்துசிவ நூல்கள் முழங்குவதை முன்வைத்தே
சிந்தனை சொல்நற் செயலாற்றும் — இந்து
சாதனம் வாரியார் சந்ததம் வாழ்கவென்
றோதஇறை நிற்பன் உளத்து.

குருபாதம் சிந்தை குழைய அருண
கிரிபாடல் கீதங் கிளரும் — கிருபானந்
தப்பெரியோர் சைவநெறி வாரி வழங்கமு
தப்பரிசு தந்தோம் தழைத்து.

ver.

# திருத்தொண்டர் திருநாட் சிந்தனை

சி. சிவகுருநாதன் M. A., Dip-in Ed.

## ஆனய நாயனர்

இவர் குருபூசை: 26-11-78

அலைமலிந்த புனன் மங்கை
ஆனயர்க்கு அடியேன்,
-திருத்தொண்டத்தொகை.

ஆயர் (இடைக்) குலத் தலைவராகிய இவர் மழநாடென்னும் சீர் நாட்டு மங்கலம் என்னும் ஊரிலே சிவபக்தியிற் சிறந்து விளங்கியவர், ஆயர்குலம் சிறந்து விளங்க உதித்த இவர் சிவனடியல்லாது பேணுது இலிங்க வழிபாடாற்றி சிவபதமெய்தியவர்.

கார் காலத்திலே ஒருநாள் ஆநிரையும் ஆயரும் புடைசூழ ஆனயர் காட்டுக்குச்சென்றார். அங்கே கையினலேதொகுதிச் செய்யப்பட்ட நறுமணமுடைய மலர் மாலை போல மணம் நிறைந்த மலர்களாலிய கொத்துக்களைத் தொங்க விட்டுப் பக்கங்களிலே தாழ்ந்து விளங்கும் சடைகளையுடைய சிவபெருமானைப்போல நின்ற வாசனை பொருந்திய ஒரு கொன்றை மரத்தினை நேராக நோக்கி, நின்று, மனமுருகி. சிவபெருமானிடத்தில் ஒன்றுபட்ட மனத்தினின்றும் எழுகின்ற அன்பினலே உருகி இளகிய மனசையுடையவராகி. அமுதமாகிய இசையினைத் தருகின்ற வேய்ங்குழல் ஒலியினலே திருவைந்தெழுத்தையும் துதித்து பண் பொருந்த எழுகின்ற ஓசையை எல்லாப் பக்கங்களிலும் பரவச் செய்தார்,

இங்ஙனம் ஆனயர் வாசிக்கின்ற வேய்ங்குழலிலே திருவைந்தெழுத்தினை ஒழுக்கெடுத்துப பெருகி எழுகின்ற அதிமதுரமாகிய இசை வெள்ளமானது நிறைந்து எல்லாவுயிர்களிடமும தேவலோகத்துக் கற்பகதருவின் பூந்தேனைத் தேவாமிர்தத்தோடு கலந்து செவி வழியாக வார்ப்பதுபோலப் புகுந்தது. அப்போது, சரம் அசரம ஆகிய அனைத்துயிர்களெல்லாம் இசை மயமாயின. அவ்விசை பொதுவில நடம் புரியும் ஐயனது திருச்செவியிலும் பெருகியது, வேறு ஒருவர்கள் விரவாமே குழல் நாதத்தில் அஞ்செழுத்தால் பரவுகின்ற இசையினை விரும்புகின்ற அருட்கூத்தப்பிரானுகிய சிவபெருமான் எழுந்தருளி ஆனயருக்குக் காட்சி கொடுத்துத் தம்மிடத்து அணைத்துக்கொண்டார்.

-திருநாள்: கார்த்திகை அத்தம்

# நாவலர் கோட்டத்து நல்லறிஞன் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை நினைவு

( சுன்னைக் குமாரசுவாமிப் புலவர்
சுதன் திரு. முத்துக்குமாரசாமிப்பிள்ளை )

## அறுசீராசிரிய விருத்தம்

சுன்னை மூரு தேசன்பால் தமிழ்நூல்கள்
சூழ்ந்துகற்றுச் சோர்வே யின்றி
சென்னையிலும் காசையிலும் செந்தமிழ்த்தொண்
டாற்றி நல்ல சேவை செய்தோன்
பின்னைவண்ணை நாவலரச் சுகம்நிறுவி
வசன நூல்பல பிரசு ரித்தோன்
முன்னையிலும் புகழ்பெறு முத் துத்தம்பி
எனும்புலவன் முதல்வன் மாதோ (4)

இத்தரையில் இசைபெறுநூல் எவற்றுள்ளும்
இணையிலதாய் ஏற்ற முற்ற
அத்தநூல் அபிதான கோசக கலைக்
களஞ்சியத்தை ஆக்கித் தந்தோன்
வித்தகர் வாழ் மாணிப்பாய் நகர்வாசன்
வித்துவான்கள் வியக்கும் மேதை
முத்துதம பிப்பூமான் மூவுலகும்
போற்றிசெயும் முன்னேன் மாதோ (5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்க முத்தி தருவது அண்ணாமலை

## ஸ்ரீ அருணாசல அக்ஷரமணமாலை

காப்பு

அருணாசல வரற்கேற்ற அக்ஷரமண மாலைசாற்றக்
கருணாகர கணபதியே கரமருளிக் காப்பாயே.

நூல்

அருணாசலசிவ, அருணாசலசிவ,
அருணாசலசிவ, அருணாசலா!
அருணாசலசிவ, அருணாசலசிவ,
அருணாசலசிவ அருணாசலா!

அருணா சலமென வகமே நினைப்பவர்
அகத்தைவே ரறுப்பா யருணாசலா (அ)
அழகுசுந் தரம்போ லகமுநீ யுமுற்
றபின்னமா யிருப்போ மருணாசலா (அ)

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் எழுதிய நூல்கள்

நூறாவது குருபூசை ஆண்டு வெளியீடுகள்

1. சைவ வினாவிடை - முதற் புத்தகம் தோத்திரத் திரட்டுடன் 1-00
2. பாலபாடம் - முதற் புத்தகம் 1-50

(நாவலருடைய ஏனைய நூல்கள் 100 ஆவது குருபூசைக்கு முன் வெளிவரும்)

விபரங்களுக்கு
சைவப் பிரகாச அச்சியந்திரசாலை,
யாழ்ப்பாணம்.

## விபூதி விதிப்படி தயாரித்து விநியோகம் செய்க

அங்கத்தவர் ஆலோசனை சபையால் ஏற்கப்பட்டது

பொது மக்களின் பாவனையிலிருக்கும் விபூதி உண்மையில் விபூதிதானா என்ற வினா திருவாளர் ஐ. சம்பந்தநாதனவர்களால் அவர் சமர்ப்பித்த ஆலோசனைகளில் ஒன்று சென்ற (12-11-78) ஞாயிற்றுக்கிழமை நடந்த சைவபரிபாலன சபை ஆண்டுக் கூட்டத்தில் இது எடுத்துக் கொள்ளப்பட்டது.

திரு நம. சிவப்பிரகாசம் அவர்கள் இந்த ஆலோசனையை மிகமிகப் பாராட்டிப் பேசும்பொழுது இந்துசாதனம் இந்தக் கருத்தை அடிக்கடி எடுத்துக் காட்டி வருகின்றதென்றும் நாவலர் பெருமானின் சைவ வினாவிடை, பாலபாடங்கள் இப் பொருள்பற்றி நன்கு விளக்குவன வென்றும் அவற்றை மறு பிரசுரம் செய்து மாணாக்கர்களுக்கு உதவுதல் ஆசிரியர்களின் பொறுப்பென்றும் சுட்டிக் காட்டினர்.

'ஏல உடம்பிடர் தீர்க்கும் இன்பந் தருவது நீறு'

என்பன போன்ற குரவர்களின் திருவாய் மொழிகளை அறிந்திருத்தல்மட்டும் போதாது. அவற்றை வாழ்க்கை முறையில் வைப்பதுவும் ஏனையோர் அவ்வாறு செய்ய உதவுவதும்

## சைவ சித்தாந்தப் பெரு விழா

அகில இலங்கை இந்து ஆலோசனைச் சபை ஆதரவுடன் ஸ்ரீலஸ்ரீ பரமாசாரிய சுவாமிகள் அருளாசியுடன் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் சைவ சித்தாந்தப் பெருவிழா 18, 19-11-78 இரு தினமும் நிகழும். சித்தாந்த நல்லறிஞர் பலர் உரையாற்றுவர்.

## தென்மராட்சிப் பகுதி சைவ நிகழ்ச்சிச் செய்திகள்

தென்மராட்சி சைவமாகசபைத் தலைவர், சங்கீதபூஷணம் திரு. சி. விநாசித்தம்பி; டிஷ் சபை இணைக்காரியதரிசி, தென்மராட்சி பக்திநெறிக் கழகக்காரியதரிசி சைவப்புலவர், கு. வி மகாலிங்கம், இருவரும் ஆறு நாளும் பங்குபற்றி உரைகூறினார்கள் சைவப்பெரியார் சதா-இராசையாவும் இன்னும் பல பக்தர்களும் படிப்பிற்கலந்து கொண்டுசிறப்பித்தார்கள். சூரசங்கார தினத்தில் டிஷ் தேவஸ்தானசார்பிலும், கூட்டுப்பிரார்த்தனைச் சபை சார்பிலும் இன்னிசை விரிவுரை செய்த இருவரையும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டது.

X X X

சாவகச்சேரி சப்பச்சிமாவடிப் பிள்ளையார்கோவில் சைவப்புலவர் சைவ சித்தாந்த பண்டிதர் கு. வி. மகாலிங்கம் கடந்த ஒரு வருடமாக, திருவாதவூரடிகள் புராண விரிவுரை செய்துவருகின்றார். இம் மாதம் பெருங்கதைக் காலத்தில் 15-12-78 பூர்த்திவிழா நடைபெறவுளது.

அவசியம் ஆகும் என மேலும் திரு. சிவப்பிரகாசம் குறிப்பிட்டனர். சமயப்பிரசார அமைச்சர் திரு. மு. மயில்வாகனம் அவர்கள் அநுமதித்தனர். பிரேரணை ஏகமனதாய் அங்கீகரிக்கப்பட்டது.

ஒரு நாள் ஒருமுறையேனும்

## திருமுறை ஓதப்படாதா?

தேவாரத் திருமுறைகள் வேண்டியன வேண்டியாங்குக் கொடுக்கும் தமிழ் மந்திரங்களாகும். இவற்றை நாளும் ஓதி வாழ்க்கையில் அன்பு அமைதி பெற இளம் சமுதாயம் முன்வரவேண்டும்.

மேற்கண்டவாறு அளவெட்டி கும்பிழ வளைப் பிள்ளையார் கோவில் பரிபாலன சபைத் தலைவர் சைவப் பெரியார் திரு மயில்வாகனம் அவர்கள் கடைசி ஐப்பசி வெள்ளித் திருவிழாவன்று நடைபெற்ற பண்ணிசைக் கலாநிதி எஸ். கே. சிவபாலனின் தேவார இன்னிசை நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து உரையாற்றிய போது குறிப்பிட்டார்.

மேலும் தமது தரையில் ஈழத்தில் திருமுறை வளர்ச்சிக்கு சிவபாலனார் செய்து வரும் பணி யாவராலும் போற்றப்பட வேண்டியதென்றும், பீ. ஏ. எஸ். இராசசேகரனிடம் பயின்ற மாணவர் வரிசையில் முறையாகப் பயின்ற முதல் மாணாக்கராகத் திகழ்வது குறித்துத் தாம் பெருமைப்படுவதாகவும் கூறினர்.

மேற்படி ஆலயத்தொண்டர் சபைச் செயலாளர் எஸ். தயாபரனின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவெய்தியது

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல. M B 1108

விசுவநாதன் ஈகம்பெண் வள்ளியம்மை தொட்டிலடி

சங்கானை கிழக்கு — வழக்காளிகள்

எதிராக

1 வல்லிபுரம் ஆறுமுகம் பெண்
2 செல்லமுத்துவும் சோதிப் பிடிச்சி சண்டிருப்பாய் — எதிராளிகள்

மல்லாகம் டிஸ்றிக் கோட்டின் M B 1108 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டின் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1978 ம் ஆண்டு கார்த்திகைமீ 22உ திங்கட்கிழமை மு. ப. 10-45 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 2000 ம் 19-3-76 தொடக்கம் 21-9-77வரைக்கும் ரூபா 1000-க்கு 10 வீத வட்டியும் பின் முழுத் தொகையும் இறுக்கும் வரை 9% வட்டியும் க்காட்டுச் செலவு ரூபா 491-75 சதம்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் வலிகாமம் மேற்கு மானிப்பாய் கோவிற் பற்று சண்டிருப்பாய் இறை சத்தாரயள தோட்டம்,, அதிலது ஐயன் வளவு வேலன் வளவும் பரப்பு நில. இல. 22, 3/4 லும் கிணறும் தென்னைகளும் மற்றும் வாழ்பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கு ஆறுமுகம் தில்லைநாதன் பெண் தங்கரத்தினத்தின் ஆதனமும் ஒழுங்கையும். வடக்கு சிவயோகம் இராமலிங்கத்துக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம் மேற்கு ஒழுங்கையும் செல்லையாவின் ஆதனமும் தெற்கு தம்பிஐயா பெண் கண்ணுபாக்கியத்துக்கும் தில்லைநாதன் பெண் தங்கரத்தினத்துக்குமுரிய ஆதனங்கள் இதடங்கலும். இக்காணி E 174 123 ல் யாழ்ப்பாணம் பதிவுக்கந்தோரில் பதியப்பட்டுள்ளது

சி. சேர. நரசிங்கம் J. P
நீதிமன்ற விற்பனையாளரும்
மதிப்பாளரும்

தொல்புரம்
15-9-78

## உடம்பெல்லாம் கண்ணாய் ஆநந்த நீர் ஊறுதல்

(முன் வளர்ச்சி - 6)

வெள்ளம்தாழ் விரிசடையாய்
விடையாய் விண்ணோர்
பெருமானே எனக்கேட்டு
வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலில்
கீழ் மேலாகப்
பதைத்துருகும் அவர்நிற்க
என்னை ஆண்டாய்க்கு
உள்ளந்தாள் நின்றுச்சி
அளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாம்
கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால்
நெஞ்சம் கல்லாம்
கண்இணையும் மரமாம்தீ
வினையி னேற்கே.

திருச்சதகத்திற் கருத்தை நோக்குவோம்

இறைவன் அருள் அநுபவித்த அன்பர்கள் அநத நிறை பொருளைப்பற்றிய நெறியெலாஞ் சொலக்கேட்ட பேரன்பர்கள் அப்பேரின்ப நுகர்ச்சியைக்காத்திருக்க அவர்க்கு அருள் செய்யாமல் தம்மை ஆண்ட ஈசன் பொருட்டு வாசகனார் கண்கள் நீர் பெருக்கின்றிலவே எனச்சொல்லும் புலவர் அக்கண்கள் மரக்கண்கள் என்கின்றார்.

நெஞ்சும் கண்ணும் தனித்தனி நஞ்சுண்டவர் பால உருகுதல் வேண்டும். ஒன்று இயங்குவதை மற்றையது எதிர்பார்க்க வொண்ணாது. இயல்பாய் இவ்விரண்டுறுப்புக்களும் இயங்க வேண்டும் அப்பொழுதுதான் கண் நீர் உள் நின்று பொழியும் இந்த இலட்சியத்துக்குரியது கண். அவ்வாறில்லாதது மரத்தாலாய போலிக்கண் மனிதர்கள் மரக்கண்கள் உடையோர்போல்வாளா திருத்தல் வேண்டும். என்பது புலப்படுகின்றது

—

## நாவலர் விழா

யாழ். நாயன்மார்கட்டு சைவ சமய அபிவிருத்திக் கழக ஆதரவில் ஸ்ரீ இராஜராசேஸ்வரி பேய்ச்சியம்பாள் ஆலயத்தில் 23-11-78 வியாழன் அதி காலையும், அடுத்தநாள மாலையும் நாவலர் விழா வழமைபோற்கொண்டாடப்படும்.

புத்தகச் செய்தி

### மின் வைற் செய்தி கார்த்திகை 1978 இதழ்

வழக்கம்போல இச் செய்தி மிகச்சிறப்பாக வெளிவந்துளளது தொழிலதிபர் வள்ளல் திரு. க. கனகராசவின் மனத்துக்குமிகவும் விருப்பமானமரம் நாட்டுதலும், பனையபிவிருத்தியும் என்ற விஷயங்கள் சிறப்பிடம் பெற்றுள்ளன. இப்போ கந்தசஷ்டி விரதம் மக்களாலே அநுட்டிக்கப்பட்டுவருவதால் அவ்விஷயம் பற்றியும் சிறப்புக்கட்டுரை இடம்பெற்றுள்ளது. வழக்கமாக உள்ள கடவுள் வணக்கம், திருவள்ளுவர் திருக்குறள்-சூரியநமஸ்காரம், சிவலிங்கம், சோல் பரிகண்டயழ்நகர்சுவாமி முதலாய கட்டுரைகள், செய்திஆசிரியர் பல்கலைப்புலவர்-க-சி- குலரத்தினமவர்களின நுண்மாண்நுழைபுலத்தை விளக்கி மிளிர்கின்றன.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

பொன்னையா பாலசிங்கம், மயிலியதனை, தொண்டமானாறு
இல. ஈடு. 13629 — வாதி

எதிராக

அம்மணி சின்னவன், கம்பர்மலை, உடுப்பிட்டி.
வல்வெட்டித்துறை — பிரதிவாதி

மேற்குறித்த வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படும் ஆதனத்தை 1978ம் ஆண்டு டிசம்பர் மாதம் 30-ம் திகதி 30-12-1978) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும.

ஆதனத்தின் மதிக்கப்பட்ட விலை ரூபா 7,887.50

ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி உடுப்பிட்டிக் கோவிற்பற்று உடுப்பிட்டி இறை "தலவாங்கூடல்" நி. பர. 23½ வீடு 1 இப்பிரிவுகட்கு ஆட்சிப்படி நி பர. 1½ இதில கிழக்குப புறமாக நிந்தமான நி. பர. 3 இல் வடக்குப் புறமாக நி. பர. ½ பிற நீக்கலாக மிததிக்கு நி பர. 2½ எல்லை கிழக்கு சின்னவன் சோமனுக்கும் மறுபேருக்குமுடையவாதனம், வடக்கும் தெற்கும, ஒழுங்கை மேற்கு கையொழுங்கை இவ் வெல்லைக்குட்பட்ட நிலம், பனைகள், வடலிகள, கல வீடு அடங்கலிற் சொரியலாய் ½ பங்கும் முழுக் காணிக்குள் வடமேற்குப் புறமாகவிருக்கும் கிணற்றில் 16/1 பங்கில் ½ பங்கும் வழி வாய்க்கால் உரித்தும் (பதிவு - பந்தி A 86 / 125)

பிரதிவாதியால் கொடுக்கப்பட வேண்டிய கணக்கு விபரம்

| | | | |
|---|---|---|---|
| வழக்கு போடும்போது உள்ள தொகை | ரூபா | 2615 | 25 |
| ரூபா 1650/- 12-8-76 தொடக்கம் 5-5-77 வரை 12 வீத வட்டி | | 148 | 50 |
| ரூபா 2763/-க்கு 6.5 77 தொடக்கம் 6-10-78 வரை 9 வீத வட்டி | | 346 | 12 |
| | ரூபா | 3109 | 87 |
| கொடுபட்ட தொகை | | 800 | 00 |
| மிகுதி | ரூபா | 2309 | 87 |
| (சமயாசமயச் செலவும் கொடுபடவேண்டும்) | | 77 | 77½ |
| மொத்தம் | ரூபா | 2387 | 64½ |

க. நா. சுப்பிரமணியம்
கொமிஷனரும்
விலைமதிப்பாளரும்

புலோலி மேற்கு
புலோலி
16-11-1978

எம். 157 17-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

Hindu Organ

Friday, November, 17. 1978

## OUR SABHAI MARCHES ONWARD

With another decade to go, the coveted mark of a Century is looming large as the Saiva Paripalana Sabhai is getting ready to plan its program for the ninetieth year of administration The humble beginning with a renowned personality — Vidva Siromany Ponnambalapillai—as the Sabhai's first President had been of such import that the subsequent growth could not be but a continuous story of steady and sustained progress.

The Sabhai is now a fullfledged organization with added responibilities such as the various Trusts which have been vested in it. Hence the magnitude of its multifarious duties.

At the General Meeting held last week, ardent members moved that the Sabhai should make special and specific efforts to ensure that the Saiva puplic be properly guided particularly in the sphere of religious practice. A resolution enabling the Sabhai to prevail on the Government to introduce legislation prohibiting the manufacture and sale of alcoholic drinks was unanimously passed So were other reolutions relating to the strict adherence to Veda Agamic requirements adopted

We ourselves have a prominent part to play in the activities of the Sabhai The Hindu Organ and the Inthusathanam as the principal vehicle of thought of the Sabhai have during the past nine decades proved to be efficient means of propaganda. The Shaiva public have to extend their spontaneous support in a greater measure to enable these Journals do more service to the country It is our fervent desire that every Hindu home should have the Hindu Organ in its reading room and be proud of such possession. This journal will certainly take every subscriber along the prescribed path of correct religious practice.

Satyam Eva Jayate — C. Rajagopalachari

## An Elemental Necessity

"Why can't I be good myself, why do I want God Who has not demonstrated His existence to me? I am a member of society and I know what I should do and what I should not do, I do not require to be terrorized into good conduct. And good conduct is all that is wanted, isn't it?"

Thus say many to themselves, especially the 'educated' people, those who have been brought up in decent families and are well and comfortable. Alas, they are wrong!

I would call their confidence an illusion of inheritance. The notion that God and Religion are superfi ous and can be dispensed with is a born of a state of mind that is itself the product of ages of God and Religion. We are apt to be unconscious of what we possess, thanks to our parents and to society! The sons of a wealthy father may imagine that poverty and unemployment are no problems, and that they are just vices and aberrations born of idleness. Similarly we who have inherited certain habits of thought and moral feeling are apt to think that God is a superfluity that can be dispensed with We do not remember that the decent social conduct of which we are so sure is itself the crystallized result of the faith and habit of ages. It is only a matter of time, and that too not very long, that what we are so sure of in respect of descent social conduct will wear out, as a tree dies when its roots are cut off. We shall be left with a problem far more difficult than what our forbears faced. The vicious urges of modern times are more manifold than those that disturbed our ancestors.

It is true that detachment and performance of duties without thought of personal gain automatically give a spiritual saisfaction much above what any personal gain can give. But what will lead you and me to detachment? What will sustain it on occasions of doubt and conflict? What will sustain equanimity and maintain loyalty to rules of decency and gentleness when one undeservedly meets with failure or with something worse?

Nothing but fixed faith and devotion to God can sustain us. Not without reason therefore did Tiruvalluvar say:—

"Hold fast to the Lord Keep that supreme attachment intact so that you may be released from other attachments that bind the soul."

This extract from Rajaji's writings was forwarded to us by
SHRI
S. SIVASUBRAMANIAM
Life Member, Jaffna Saiva Paripalana Sabhai

# MUCH NEEDED RELIEF FOR MIDDLE CLASS

## Matter-of-Fact Budget with a Meaning

Commenting on Budget proposals is certainly a matter for carefull study. But, interested as we are in religious work, we found the time to read the frame work and proposals of the Budget for 1979 — 1980. And we unhesitatingly say that the Minister of Finance has done wonderfully well in soothing the misgivings of the common man.

A discontented middle class cannot make up their minds to do religious service Religious propaganda depends on the munificence of the middle class though millionaires may occasionally contribute large sums of money to enable fulfilment of religious activities.

The increase in the salary of all public servants and those in the private sector along with the magnanimous gesture of excluding salaries from being reckoned for purposes of Income Tax are special features of the new Budget.

*Letter to the Editor*

*The Editor,*
*Hindu Organ*
*Sir,*

Mr. R. Somasundaram of Malaysia and his wife have contributed a sum of Rs 300 00 towards the building fund of the Naranthanai Ganesha Vidyalayam. I would be thankful to you to publish this news in your esteemed paper as it would serve as an incentive for the Tamils in Malaysia to make contributions towards the maintenance of the schools and Temples in Ceylon.

Yours Truly,
Singapore. A. Rajah

(Mr. Rajah is very enthusiastic Hindu who even in his eighty-fourth year is as energetic as ever and speaks and writes about Hinduism. Contributions towards just causes have to be brought to the notice of the public as such willing donations will bring in further contributions to other deserving causes It is to be hoped that like Mr. Somasundaram, other Hindus in Malaysia will emulate his example and help the cause of Hindu Schools in Jaffna — their alma mater. —ED.

## PILGRIMS IN PATHETIC DISASTER

Two hundred lives to perish all together and that after returning from a Holy Pilgrimage is a heart-rending occurrence. The airplane crash just just outside the Katunayake Port took place at midnight on Wednesday last and cast a sorrowful gloom all over our Island The victims are all Indonesian Hadji pilgrims Our condolences go to the members of the bereaved families.

What a pathetic plight for religious pilgrims!

## Shrines for Shaivites in London

The Movement for building a Shaiva Shrine in London has been making all efforts in this direction for the last ten years. But the proposal has not yet taken any definite shape.

It is understood that Shaivites in London gather on Fridays and other religious occasions in rented prem ses and have their prayer with a VEL installed for this purpose. About three to four hundred Shaivites attend these Prayer assembly.

The Shaivites of London will do very well to purchase a dwelling place and have it converted as an Ashrama Prayers and other observances can be performed with better facilities. However, it is unfortunate that the building of a Shrine has not taken any concrete form.

## Stored up Stocks of Sugar But in Vain

The new Budget came down as a hammer on the head of the dealers in the Black Market when it revealed that there were no increases in the cost of any items of articles.

For a fortnight the Black Trader has been hoarding large stocks of flour, sugar, kerosine and similar things with a view to making instant wealth. His dream of becoming a fabulously rich mudalali could not come true — thanks to the vigilant Minister of Finance.

Guesses of what the secrets the Budget proposals would have also were wild and even wishful. But these professional soothsayers saw actual stars when they, to their chagrin, found that their foretelling had fallen flat.

Along with the kings of the Black Market, the rumour mongers of unfounded anticipation had done a lot of damage. House holders were refused the supply of sugar, flour and kerosine during the past two weeks.

This is a practice of Adharma and has to be condemned by religious societies.

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்.

*Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450, K. K. S. Road, Vannarponnai, Jaffna on Friday, November 17, 1978.*

Editor-in-Chief:
R. N, Sivapirakasam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org